**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்.**

முன்னிலை: **கா. நிலவரசன்,** B.A.,B.L,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்போரூர்.

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**பட்டியல் வழக்கு எண்.315/2022**

**வழக்கின் சுருக்கம்**

(விதி 106 குற்றவியல் நடைமுறை விதிகள் மற்றும் நீதிமுறை படிவம் 61)

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | தமிழ்நாடு அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், தாழம்பூர் காவல் நிலையம், குற்ற எண்.776/2021 |
| 2. | எதிரிகளின் பெயர் | 1. சூரியா,<br>2. பாபு |
| 3. | எதிரிகளின் தந்தை / கணவர் பெயர் | 1. பாபு<br>2. கபீர்தாஸ் |
| 4. | எதிரிகளின் தொழில் | கூலி |
| 5. | எதிரிகளின் முகவரி | இருவரும் வசிப்பது நியூ மணிகண்டன் அப்பார்ட்மெண்ட், திருப்போரூர் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். |
| 6. | எதிரிகளின் வயது | 1. 22/2021<br>2. 46/2021 |
| 7. | எதிரிகளின் இனம்/சமுதாயம் (காண்க நீதிமுறை படிவம் 61) | – |
| 8. | குற்ற நிகழ்வு நாள் | 24.07.2021 |
| 9. | இறுதி அறிக்கை/தனி நபர் புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 14.09.2021 |

| | | |
|---|---|---|
| 10. | எதிரிகளின் நீதிமன்றத்தில் ஆஜரான நாள் | 1–03.06.2025<br>2–11.08.2025 |
| 11. | எதிரிகளின் பிணையில் சென்ற நாள் | 27.07.2021 |
| 12. | வழக்கு அமர்வு நீதிமன்ற விசாரணைக்கு மாற்றப்பட்ட நாள் | – |
| 13. | விசாரணை தொடங்கப்பட்ட நாள் (பிரிவுகள் 207 மற்றும் 238 குவிமுச) | 11.08.2025 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | 10.06.2026 |
| 15. | தீர்ப்பு/உத்தரவு நாள் | 11.06.2026 |
| 16 | எதிரிக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்ட நாள் | எழவில்லை |
| 17. | காலதாமத்திற்க்கான காரணம் | எழவில்லை |

இவ்வழக்கு கடந்த 14.09.2021 அன்று செங்கல்பட்டு, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1–ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு நில அதிகார வரம்பின் கீழ் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, கடந்த 28.12.2022 அன்று மறுகோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 10.06.2026 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த **குற்ற உதவி வழக்கறிஞர் நிலை– i** அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. E. இரகுபதி,** அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதமும், வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**தீர்ப்புரை**

நாவலூர் கிராமத்தைச் சேர்ந்த அ.சா.1ன் அம்மா வீராயி என்பவர் பக்கத்து வீட்டில் வசிக்கும் ஜெயா என்பவருக்கு ரூ. 5,000/-ஐ கைமாற்றாக கடன் கொடுத்திருந்த நிலையில், கடந்த 24.07.2021 அன்று காலை 07.15 மணியளவில் ஜெயா அந்த கடனை திருப்பி கொடுப்பதற்காக அ.சா.1ன் வீட்டிற்கு வந்ததாகவும், அப்போது அங்கு வந்த ஜெயாவின் கணவர் 2ம் எதிரி, அவரது மனைவி அ.சா.1ன் வீட்டிற்கு வந்ததால் அவர் மீது சந்தேகமுற்று ஓத்தா, தெவிடியா பையா என்று அ.சா.1ஐ பொது இடத்தில் ஆபாசமாக திட்டியதாகவும், கட்டையாலும், கையாலும் அ.சா.1ஐ தன்னிச்சையாக தாக்கியதாகவும், அவரது மகனான 1ம் எதிரியும் அ.சா. 1ஐ தாக்கியதாகவும், எதிரிகள் இருவரும் அ.சா.1ற்க்கு கொலை மிரட்டல் விடுத்ததாக தாழம்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரிவுகள் 294(b), 326 மற்றும் 506(ii) இதச-ன் வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரிகள் அழைப்பாணையின் பேரில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகிய பிறகு பிரிவு 207 கு.வி.மு.ச-வின் கீழ் வழக்கின் ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிகள் அதனை மறுத்ததால் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டத்தில், எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு முதல் தோற்ற

வழக்கு காணப்பட்டதால், எதிரிகளுக்கு எதிராக பிரிவுகள் 294(b), 326 மற்றும் 506(ii) இதச–வின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, எதிரிகளுக்கு தமிழில் படித்து காட்டி வினவியபோது எதிரிகள் அதனை மறுத்ததால், அவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றசாட்டுக்கள் குறித்து விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு இந்நீதிமன்றம் உத்தரவிட்டது.

3. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 ஆகிய சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆகிய சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்;**

i. மேற்கண்ட சம்பவத்தை தொடர்ந்து காயமுற்ற அ.சா.1 24/07/2021 அன்று காலை 11 மணியளவில் கேளம்பாக்கம் செட்டிநாடு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு மருத்துவர் வேதபிரியா என்பவர் சிகிச்சை அளித்துள்ளார். பின்பு அ.சா.1 சிகிச்சை முடிந்து அன்றைய தினமே காலை 10.00 மணியளவில் தாழம்பூர் காவல் நிலையம் சென்று அங்கு

பணியில் இருந்த இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் திரு. செந்தில்வெல் என்பவரின் வசம் அ.சா.ஆ.1/புகார் கொடுத்துள்ளார்.

ii. பின்பு புலன் விசாரணை அதிகாரி அப்போதே குற்ற எண்.776/2021, ச.பி. 294(பி), 324 மற்றும் 506(2) இ,தச கீழ் அ.சா.ஆ.2/முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு அன்று காலை 10.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பழனிவேல் மற்றும் பழனி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.3/பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அன்று காலை 11.30 மணியளவில் சம்பவ இடத்தில் இருந்து அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2/உருட்டு கட்டைகள்–2 ஐ அ.சா.ஆ.5/கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றியுள்ளார்.

iii. பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் அ.சா.1, வீரா, தாஸ், கணபதி. பழனிவேல், பழனி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்த வழக்கின் எதிரிகளை அன்று மதியம் 01.00 மணியளவில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். காயமுற்ற அ.சா.1 ற்கு சிகிச்சை

அளித்த செட்டிநாடு மருத்துவமனை மருத்துவர்கள் வேதபிரியா மற்றும் ரமேஷ் ஆகியோரை தனிதனியே விசாரித்து அ.சா.ஆ–6/விபத்து பதிவேடு மற்–றும் அ.சா.ஆ.7/காயசான்றிதழ் பெற்றுள்ளார்.

iv. பின்பு மருத்துவர் வழங்கிய காய சான்றிதழ் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 324 இ.த.ச வை 326 ஆக பிரிவு மாறுதல் அறிக்கை மூலமாக அ.சா.ஆ.8/பிரிவு மாறுதல் செய்துள்ளார். பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை படிவம் 95 மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்து பின்பு புலன் விசாரணை நிறைவு செய்து எதிரியின் மீது பிரிவுகள் 294(பி), 326 மற்றும் 506(2) இ,தச கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5. எதிரிகளுக்கு எதிராக சொல்லப்பட்டுள்ள சாட்சியங்கள் குறித்து பிரிவு 313(1)ஆ கு.வி.மு.ச–வின் கீழ் வினவியபோது எதிரிகள் தங்களுக்கு எதிரான சாட்சியங்களை மறுத்துள்ளனர். மேலும் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்று தெரிவித்தனர்.

6. அரசு தரப்பில் தோன்றிய கற்றறிந்த குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை – i தனது வாதத்தில், எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு

தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

7. மாறாக எதிரிகள் தரப்பில் தோன்றிய கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை உறுதிபடுத்தும் வகையில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அமையவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

8. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**

9. எதிரிகள் அசா.1 ஐ பொது இடத்தில் ஆபாசமாக திட்டியதாகவும், கட்டையால் தன்னிச்சையாக தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாகவும்,

கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. அ.சா.1 கொடுத்துள்ள புகாரில், சம்பவ நாள் அன்று 2ம் எதிரி அவரது மனைவி அ.சா.1ன் வீட்டிற்க்கு வந்தது குறித்து அவரது மனைவியின் மீது சந்தேகமுற்று அ.சா.1 ஐ பொது இடத்தில் ஆபாசமாக திட்டியதாகவும், கட்டையாலும், கையாலும் அ.சா.1 ஐ தன்னிச்சையாக தாக்கியதாகவும், அவரது மகனான 2ம் எதிரியும் அ.சா. 1ஐ தாக்கியதாகவும், எதிரிகள் இருவரும் அ.சா.1ற்க்கு கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

10. ஆனால் அ.சா.1 இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டபோது, தனது முதல் விசாரணை சாட்சியத்தில், எதிரிகளுடன் வாய் தகராறு ஏற்ப்பட்டதாகவும், அந்த கோபத்தில் எதிரிகளின் மீது புகார் கொடுத்துவிட்டதாகவும், எதிரிகள் தன்னை ஆபாசமாக திட்டவோ, தாக்கவோ, கொலை மிரட்டல் விடுக்கவோ இல்லை என்று அரசு தரப்பு வழக்கிற்க்கு முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளனர். எனவே அ.சா.1ன் சாட்சியம் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்த போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11. எனவே, இவ்வழக்கின் பிரதான சாட்சி அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கின் பிற சாட்–சிகள் அனைவரும் விசாரணை செய்வதிலிருந்து விலக்கப்பட்டு, புலன் விசார–ணை அதிகாரிக்கு பதிலாக அவரது கையெழுத்துக்களை பரிச்சயம் பெற்ற தா–ழம்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

12. அ.சா.2 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்திருந்தாலும், அவருடைய சாட்சியம் ஆவணங்கள் அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ளது. எனவே இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்து அ.சா.2 ற்க்கு நேரடியாக தெரிய வாய்ப்பில்லை. எனவே அ.சா.1 ன் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் உறுதிப்படுத்தப்பட்டதாக தீர்மானிக்க முடியாது.

13. எனவே அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான அ.சா.1 ஐ பொது இடத்தில் ஆபாசமாக திட்டியது, கட்டையால் தன்னிச்சையாக தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியது மற்றும் கொலை மிரட்டல் விடுத்தது

ஆகியவை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகள் பிரிவுகள் 294(பி), 326, 506(2) இ.த.ச–வின் கீழ் குற்றவாளிகள்இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை பிரிவு 248(1) கு.வி.மு.ச–வின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

வழக்கு சொத்து (வா.சொ.எண்.294/2021) அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2/சுமார் 2 அடி நீளமுள்ள உருட்டு கட்டைகள்–2 ஐ இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கவும், எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று (12.06.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் இவ்அவையறிய பகரப்படுகிறது.

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**

**அரசுத்தரப்பு சாட்சிகள்;**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. மான்குடி (காயமுற்ற/புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. பத்மநாபன் (காவல் உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்;–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24.07.2021 | புகார் |
| அ.சா.ஆ.2 | 24.07.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 24.07.2021 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 24.07.2021 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 24.07.2021 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.6 | 24.07.2021 | அ.சா.1 ற்கு வழங்கப்பட்ட கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.7 | 12.08.2021 | அ.சா.1 ற்கு வழங்கப்பட்ட காய சான்றிதழ் |
| அ.சா.ஆ.8 | 13.08.2021 | பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருள்,–**

| | | |
|---|---|---|
| அ.சா.பொ.1 | – | சுமார் 2 அடி நீளமுள்ள உருட்டு கட்டை |
| அ.சா.பொ.2 | – | சுமார் 2 அடி நீளமுள்ள உருட்டு கட்டை |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்;**
இல்லை.

**குறிப்பு;—**

| | |
|---|---|
| 1. | இவ்வழக்கின் எதிரிகள் கடந்த 24.07.2021 அன்று கைது செய்யப்பட்டு, எதிரிகள் செங்கல்பட்டு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் –1 ன் கு.ப.மண்.4802/2021, உத்தரவு நாள் 27.07.2021 பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 2. | இவ்வழக்கின் சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 3. | தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 4. | இத்தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், செங்கல்பட்டு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**